செ.வெ.எண்.55 நாள்.29.01.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்த தெரு கூத்து விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து, துவக்கி வைத்தார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்த தெரு கூத்து விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று **(29.01.2018)** கொடியசைத்து, துவக்கி வைத்தார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் அரசால் செயல்படுத்தப்படும் பல விதமான உதவித் திட்டங்கள் மற்றும் அவர்களது உரிமைகள் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் மாவட்ட அளவிலான தெருமுறைப் பிரச்சாரங்கள் மற்றும் சாலை விளக்கு நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளபடி நடைபெறவுள்ளது.

| **நாள்** | **மண்டலங்கள்** | **தெருமுனை நாடகங்கள் நடைபெறும் இடங்கள்** |
|---|---|---|
| 29.01.2018 | **திருநெல்வேலி** | மாவட்ட ஆட்சியரக அலவலக வளாகம், புதிய பேருந்து நிலையம், டவுண், மேலப்பாளையம், மானூர் ரஸ்தா |
| 30.01.2018 | **இராதாபுரம்** | வள்ளியூர், இராதாபுரம், திசையன்விளை, நாங்குநேரி, களக்காடு |
| 31.01.2018 | **கடையநல்லூர்** | வாசுதேவநல்லூர், சிவகிரி, கடையநல்லூர், ராயகிரி, புளியங்குடி |
| 02.02.2018 | **தென்காசி** | அம்பாசமுத்திரம், புளியரை, தென்காசி, பாவூர்சத்திரம், ஆலங்குளம் |
| 03.02.2018 | **சங்கரன்கோவில்** | திருவேங்கடம், குருவிகுளம், சங்கரன்கோவில், மேலநீலிதநல்லூர், வன்னிக்கோனந்தல் |

மேற்குறிப்பிட்ட நாட்களில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்த தெரு கூத்து மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெறுகிறது. எனவே, பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தமிழக அரசின் திட்டங்கள் மூலம் பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.சாந்தி குளோரி எமரால்டு, முடக்கியல் வல்லுனர் திரு.பிரபாகரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.